தாலாட்டு உணர்த்தும் மெய்ப்பொருள் சிந்தனை

Lullaby Realizing philosophical thought

கு. முத்துலிங்கம், முனைவர் பட்ட ஆய்வாளர், மாநிலக் கல்லூரி, சென்னை – 05.

G.Muthulingam, Ph.D Research Scholar, Presidency College, Chennai – 05

DOI: 10.5281/zenodo.4662241

ஆய்வுச் சுருக்கம்

தாலாட்டு இலக்கியம் என்பது கிராமப்புறங்களில் படிப்பறிவு இல்லாத தாய்மார்களிடம் இயல்பாக உருவான நாட்டுப்புற இலக்கியம் ஆகும். எனினும் அவ்விலக்கியத்தில் உலகியல், வாழ்வியல் உண்மைகள் என்று தத்துவச் சிந்தனைகள் பதிவாகியிருப்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. இவ்வாய்வுக் கட்டுரையானது கற்றறிந்தும் தவமிருந்தும் ஞானம் போதித்த அறிஞர்களின் தத்துவங்களுக்கு நிகரான, சில வேளைகளில் அவற்றைவிடவும் மேலான, கருத்துகளை அனுபவமாக எடுத்துரைக்கும் தத்துவ மரபு, தாலாட்டுப்பாடும் தாய்மையிடம் வெளிப்படுவதை எடுத்துக்காட்ட முயற்சிக்கிறது.

Abstract

Lullaby literature is a folk literature that originated naturally with uneducated mothers in rural areas. This article, however, seeks to examine the philosophical views recorded in that literature as secular and biological facts. This essay seeks to show that the philosophical tradition, which is empirically similar to the philosophies of scholars who have learned and repented, and sometimes even more so, is expressed in lullaby and motherhood.

Keywords: தத்துவம் – மெய்ப்பொருள், முக்தி பேறு – வீடுபேறு, பதம் – சொல், ஊழ் – முன்வினை, புலகாங்கிதம் – மெய்சிலிர்ப்பு நிலை, மிகுந்த மகிழ்ச்சி, கண்ணேறு – கண் திருஷ்டி, ஞானியர் – பெண் தத்துவவாதி.

முன்னுரை

உலக மெய்ப்பொருள் சிந்தனையென்பது இரண்டு பிரிவுகளாகப் பிரித்துப் பார்க்கப்படுகிறது. அவற்றில் ஒன்று இந்தியச் சிந்தனையைக் குறித்தது. மற்றொன்று கிரேக்கச் சிந்தனையைக் குறித்தது. இவ்விரண்டு தேசத்தின் தத்துவக் கருத்துகளை அடிப்படையாகக் கொண்டு, இத்துறையில் ஆய்வு செய்துவரும் அறிஞர்கள் பலரும் கிரேக்கத் தத்துவமே முதன்மையானதென்று ஆய்வுரை நிகழ்த்துகின்றனர். மெய்ப்பொருளியலில் கிரேக்கமே முன்னிலையில் இருப்பதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். ஆனால் கிரேக்கத்தில் தத்துவம் துளிர்க்கத் தொடங்கிய காலத்திலேயே இந்தியா, தத்துவத் துறையில் செழித்தோங்கி வளர்ந்து நிலைபெற்று இருந்திருக்கிறது.

இத்தகைய செல்வாக்கு பெற்று இருந்த தத்துவச் சிந்தனையானது இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பரவியிருப்பதற்கு வாய்ப்புகள் அதிகம். அதனைப் படிப்பறிவு பெற வாய்ப்பு இல்லாது வாழ்ந்த தமிழக கிராமத்துத் தாய்மார்கள் எவ்வாறு மனதால் உள்வாங்கியும் அதனைவிடவும் தங்களது அனுபவத்தின் வாயிலாகக் கண்ட வாழ்வியல் உண்மைகளை, வாய்மொழி கவிதைகளான தாலாட்டு இலக்கியத்தில் வெளிப்படுத்தியுள்ளனர். அவர்கள் இம்மண்ணுலகில் வாழும் குழந்தைகளுக்கு அறிவு ஒளியாக இருந்திருக்கின்றனர். அத்தகைய கருத்துகள் தாலாட்டுப் பாடலில் பதிவாகியிருப்பதை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

தத்துவம் - பொருள் விளக்கம்

தத்துவம் என்ற சொல்லுக்குப் பொருள் யாதெனக் காண முற்பட்டால் தத்+துவம்=தத்துவம், தத்-அது, துவம்-தன்மை என்றவாறு பொருள் உணர்த்தி ‘அதன் உண்மைத் தன்மை’, ‘மெய்யறிவு’ என்பதாக பவானந்தர் சொல்லகராதி பொருள் உரைக்கிறது. கழகத் தமிழ் அகராதி ‘தத்துவம்’ என்பதற்கு ‘உண்மைநிலை’ எனும் பொருள் தருவதை காண்கிறோம். இந்தியத் தத்துவக் களஞ்சியமானது “பொருள் தன்மைகளை ஆராய்ந்து மெய்மையினை நிலைநாட்டும் அறிவுக் கலைக்குத் தத்துவம் என்ற குறியீடு வழங்கப்பட்டுள்ளது” (சோ.ந.கந்தசாமி தொகுதி -1 ப.10) என பொருள் உரைப்பதிலிருந்து தத்துவம் என்பதற்கு மெய்ப்பொருள் எனும் தமிழ் ‘பதம்’ நேரான பொருள் தருவதாக இருப்பதை அறிகிறோம். உலகப் பொதுமறையாகிய திருக்குறளில்,

“எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு”.

எனும் குறட்பாவழி தத்துவத்திற்கான விளக்கமும் தத்துவம் தமிழில் மெய்ப்பொருள் எனும் பொருள் அடைவிலேயே பயன்பாட்டில் இருந்து வந்துள்ளதையும் அறிய முடிகிறது.

இவ்வாறு தோற்றம் பெற்றிருக்கின்ற தத்துவங்களை மனிதன் உருவாக்கிய சமயங்கள், அறிவியல் கண்டுபிடிப்புகள் படைப்புத்திறனால் உருவாக்குகின்ற இலக்கியங்கள் என வாழ்க்கையின் எல்லாவற்றிலும் இரண்டறக் கலந்தவையாக வெளிப்பட்டு அவை வளரவும் தொடங்குகின்றன. தத்துவத்தை துல்லியமாக வரையறை செய்து அதன் குறிப்பிட்ட மையத்தைக் கூறுவது என்பது மிக கடினம். தத்துவம் பற்றிய அறிமுகத்தை தரும் எட்வர்டு கிரெய்க் அவர்கள் “நான் உங்களை மிகத் துல்லியமாகத் தத்துவத்துக்கு அறிமுகப்படுத்த முடியாது. ஏனெனில் நீங்கள் ஏற்கனவே அறிமுகமாகியுள்ளீர்கள் அல்லது நான் உங்களுக்கு மிகத் துல்லியமாக தத்துவத்தை அறிமுகப்படுத்த முடியாது, ஏனெனில் அது மிக பலவாக உள்ளது. மாற்றத்திற்கு உரியது” (சே.கோச்சடை, 2005;13) என்று உரைத்திருப்பதன் மூலம் தத்துவம் காலப்போக்கில் மாற்றத்துடன் கூடிய வளர்ச்சிகளை உடையது என்பது புலனாகிறது.

மேலும் “தத்துவம் என்பது அறிவியல் பிரிவின் தாயாக விளங்கியது என்பது மறுப்புக் கூற மடியாத உண்மை. இது தமிழில் மெய்ப்பொருளியல் என்ற சொல் பொருள் கொள்கிறோம்”

என்றும், தத்துவங்களை தமிழ் இலக்கியங்களில் ஆராயும் போது கிடைக்கும் பொருண்மைகளைத் தத்துவத்துக்கு மூன்று வகையான பொருள்களை பார்க்கிறோம் . அவை “1) நிலையான உண்மையைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளுதல் 2) புரியாத முறையில் பேசுதல் 3) நிலையாமையைப் பற்றி பேசுதல் இவற்றுக்கெல்லாம் தத்துவம் என்று ஒரு பெயர் தரப்படுகிறது” (பொன்.கோதண்டராமன் 2004;13) என்றெல்லாம் ஆய்வறிஞர் டாக்டர் பொற்கோ தரும் கருத்துகள் தமிழில் தத்துவச் சிந்தனைகளை புரிந்துகொள்ள உதவியாக இருக்கும் என்பது திண்ணம்.

நாட்டுப்புற பாடல்களில் தாலாட்டு

உலகில் மனித இனம் உருவாகி பேசத் தொடங்கிய காலமே மொழித் தோற்றத்தின் காலம் எனலாம். ஆனால் மொழியின் தோற்றம் குறித்த காலத்தை அறுதியிட்டுக் கூற முடியாத நிலை ஆய்வுலகில் இன்றளவும் நிலவுகிறது. அதில் வாய்மொழி பாடல்களான நாட்டுப்புற இலக்கியங்களின் தோற்றத்தையும் அறுதியிட்டு கூறுதல் என்பதும் முடியாததாகும். ஒவ்வொரு மொழியும் எழுத்துருவம் பெறுவதற்கு முன்பு பேச்சு மொழியாகவே பல ஆண்டுகாலம் இருந்திருக்கக் கூடும்.

அவ்வாறு பேச்சுமொழியில் நாட்டுப்புற மக்களிடம் உருவான படைப்புகளே நாட்டுப்புற பாடல், கதை, விடுகதை, பழமொழி போன்றன. அவற்றில் மக்களின் பழக்கவழக்கங்களும் பண்பாடும் நம்பிக்கைகளும் வெளிப்படுவதை கண்கூடாக அறிய இயலும். தமிழ்ச்சூழலில் நாட்டுப்புற இலக்கியம் என்கிறபோது “தமிழகத்தில் முதன் முதலில் தமிழக நாட்டுப்புறப் பாடல்களை சேகரிக்கும் பணி சார்லஸ் இ. கோவரால் கி.பி.1871ல் தொடங்கப்பட்டுள்ளது” (ஆறு.ராமநாதன் தொகுதி-1, 2001;14) என்பதையும் “தமிழில் முதன் முதலில் காற்றில் வந்த கவிதை என்ற நுலாக திரு. மு. அருணாச்சலம் அவர்கள் வெளியிட்டுள்ளார்” (சு.சண்முகசுந்தரம் 2007;47) என்பதையும் அறிகிறோம். அதனைத்தொடர்ந்து நா.வானமாமலை, கி.வ.ஜெகந்நாதன், தமிழண்ணல், சு.சக்திவேல், சு.சண்முகசுந்தரம், தே.லூர்து ஆறு.ராமநாதன், ஆறு.அழகப்பன் உள்ளிட்ட அறிஞர்கள் நாட்டுப்புற மக்கள் படைப்புகள் பற்றியப் பதிவுகளை அதிகம் இலக்கிய உலகிற்கு வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளனர்.

நாட்டுப்புறவியலின் பகுதிகளை 1.நாட்டுப்புற இலக்கியம் (Folk literature) 2. நாட்டுப்புறக்கலை, நம்பிக்கை (Folk arts, beliefs etc) என இருபெரும் பிரிவாக பகுக்கலாம். இதில் நாட்டுப்புறப் பாடல்கள் பற்றிக் கூறும் சு.சக்திவேல் “மண்ணின் மைந்தர்தம் மனக்கருவறையில் கருக்கொண்டு உருப்பெற்று, உயிர்பெற்று உலா வரும் உள்ளத்தின் உண்மையான வெளிப்பாடுகளே” (சு.சக்திவேல் 2013;28) என்கிறார்.

மக்களின் வாய்மொழி மரபாக தோன்றிய நாட்டுப்புற இலக்கியத்தில் மனிதன் தோன்றிய ஒன்றிரண்டு வயதிலே கேட்கும் பாடல் தாலாட்டு. தாயின் உள்ளத்து உணர்வில் இருந்து எழும்

இசைப்பாட்டு தாலாட்டு எனலாம். தாலாட்டிற்கு "தாயின் அன்பையும், சேயைச் சுற்றி எழும் கற்பனையும் பாடலாக வழங்கும் கவிதை வடிவமே தாலாட்டாகும்" (நா.வானமாமலை 2006;81) என்று நா.வானமாமலை வரையறை தருகிறார்.

தாலாட்டு என்ற சொல்லை பிரித்தால் தால் + ஆட்டு என்றாகிறது. தால் என்பது நாக்கு எனவும் நாவினை ஆட்டிப் பாடுவதால் தாலாட்டு எனப் பெயர் பெற்றுள்ளது. எனினும் 'தால்' என்பதற்கு 'தொட்டில்' என்றும் பொருள் இருப்பதால் "தொட்டிலை ஆட்டிப்பாடும் தொட்டில் பாட்டும் தாலாட்டு என்று பெயர் பெற்றிருக்க வேண்டும்" (சு.சண்முகசுந்தரம் 2003;52) என்கிறார் டாக்டர் சு. சண்முகசுந்தரம். இருப்பினும் இங்கு ஆராரோ ஆரிராரோ, ராரிக்கோ ராரிரோ ராரிரோ ராராரோ, லுலுலாயி லொள லொள லொள லொளாயி முதலான பொருள் இல்லாத நாவினை அசைத்து இசைக்கும் ஒலித் தொடர்களே பின் வருங்காலத்தில் அதற்கு தாலாட்டு என்கிற காரணப்பெயரினை அளித்திருக்கக்கூடும் என கருத இடமிருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது. தாலாட்டுப் பாடல் பாடப்படும் இசை 'நீலாம்பரி' இசை என்று வழங்கப்படுகிறது. இங்கு தாலாட்டுப் பாடும் தாய்மார்கள் இசையறிவுடன் ராகம், இசை நுணுக்கத்துடன் பாடியிருப்பார்கள் என்று கூறுதற்கில்லை. உடல் அலுப்புடன் வந்து குழந்தையை உறங்க வைக்க நினைக்கும் தாய், மன அமைதியும் குரலினிமையுமாக இயல்பான முயற்சியிலேயே பெரும்பான்மையும் பாடியிருப்பார்கள் எனக் கருதலாம்.

தாலாட்டில் தத்துவச் சிந்தனை

தாலாட்டில் தத்துவச் சிந்தனையை ஆராய்வதற்கு முன்பு தாலாட்டுப் பாடலில் தொடக்க ஒலித்தொடர்களான

ஆராரோ ஆரிவரோ – என்
கண்ணாரே ஆரிராரோ

என்று அமைந்துள்ள ஆர் ஆரோ என்னும் தொடர் "புதல்வனாக இப்போது பிறந்துள்ள இச்சிறு குழந்தையின் ஆன்மா யாது? முன்னமே இது எங்கிருந்தது? இதற்கும் தாயின் உயிருக்கும் என்ன தொடர்பு? இத்தாயிடம் இவ்வான்மா குழந்தை உருக்கொண்டு வந்து பிறப்பதன் காரணம் யாது? இவை முதலான எத்தனையோ கருத்துகளைச் சிந்தனை செய்யும்படி ஆராரோ என்னும் முதல் தொடரே நம்மை தூண்டுகிறது" (வெ.ச.திருமாவளவன் 2006;36) என்கிறார் அறிஞர் மு.அருணாசலம். அவரின் முன்மொழிவிலிருந்தே தாலாட்டு பாடல் வரிகளில் உள்ள தாயின் தத்துவச் சிந்தனைகளை ஆராயும் தூண்டுதல் பெறுகிறோம்.

தாலாட்டின் பாடுபொருள்

பாடலில் அமையப்பெற்ற சொற்றொடர்களில் மெய்ப்பொருளை காணுதற்கு முன்பு தாலாட்டின் பாடுபொருள், பாடுகின்ற சூழல் போன்றவற்றை கருத்தில் கொள்ள வேண்டிய தேவை உள்ளது. குழந்தை அழுதோ அல்லது கை, கால்களை அசைத்து அடம்பிடித்து சோர்வாகுமானால்

அதனைப் பொறுக்கமாட்டாமல் தாயின் மனம் குழந்தையை உறங்க வைக்கத் தூண்டுகிறது. அத்தைகைய சூழலில் பிறக்கும் தாலாட்டு பின்வரும் பாடுபொருள்களை கொண்டு அமைகிறது.

1. **குழந்தையைப் பற்றியன.**
2. **குழந்தைக்குரிய கருவிகளைப் பற்றியன**
3. **குழந்தையின் உறவினரைப் பற்றியன.** (சு.சக்திவேல் 2013;45)

இதோடு நின்றுவிடாமல் தாய் தன் வாழ்க்கையில் தான் பட்ட துன்பங்கள், ஊரில் நாட்டில் உள்ள சமூக அவலங்கள், தன் குல தெய்வத்தின் பெருமை, ஊரின் பெருமை, இயற்கை வளம், மானுட சமுதாயம் பற்றிய தனது புரிதலுக்கு உள்ளான சிந்தனைகள் யாவும் தாலாட்டுப் பாடலில் வெளிப்படுவதைக் கூர்ந்து நோக்குவதன் வாயிலாகக் கண்டறியலாம்.

ஊழ் பற்றிய சிந்தனை

குழந்தையில்லாக் குறையைப் போக்க பல தருமங்களைச் செய்தும் கோயில் கோயிலாகச் சென்று வந்தும் உன்னை ஈன்றெடுத்தேன் என்று கூறுமிடத்தில்

"தானமெல்லாம் செய்து பார்த்தேன் – கண்மணியே
தருமமெல்லாம் செய்து பார்த்தேன்
....
என்ன பாவம் செய்தேனோ அம்மா – கண்மணியே
ஏதுபாவம் செய்தேனோ அம்மா" (கி.வா.ஜகந்நாதன்2004;253)

என்று கூறி தான் பெற்ற குழந்தைப் பேறு முன்பு செய்த பாவங்களை, தான தருமங்களால் கடன் கழித்து பின்பு இப்பலனை அடைந்ததாக முன்வினை நம்பிக்கையின் அடிப்படையில் 'ஊழ்' பற்றிய சிந்தனையை தாய்மார் தன் தாலாட்டில் முன்வைக்கின்றனர்.

தாய் மெய்சிலிர்ப்பு அடைதல் (புலகாங்கித நிலை)

தாய் தன் சோகத்தை சொல்வதன் ஊடாக, தான் செய்த தானம், தவம், யாத்திரை ஆகியவற்றை வரிசைப்படுத்தி குழந்தையின் பிறப்பை எண்ணி பெருமகிழ்ச்சி அடையும் உள்ளக் களிப்பினை,

"பால் மணக்கும் வாயா நீ ஏங்கண்ணே
பழமணக்கும் ராமே சுரம்
....
எடக்கி எட பொங்கொடுத்து – ஏங்கண்ணே – நாங்க
ஏந்தி வந்தோம் பால(ன்) ஒன்ன" (அ.கருணாநிதி,தொ.4;2001;43)

என்று தாய் பொன் கொடுத்து ஈடுசெய்த கதையைக் கூறி குழந்தையைக் கையில் ஏந்தி தன்னிறைவு அடைந்து, மெய்சிலிர்ப்புடன் உரைப்பதைக் காண்கிறோம்.

நம்பிக்கையினால் எழுந்த தத்துவம்

நாட்டுப்புறவியலின் ஒரு கூறாக மானுட நம்பிக்கைகள் இருக்கிறது. அழகான குழந்தையைக் கண்டால் எமன் ஆசைப்பட்டு விடுவான் என்று, அதற்கு குழந்தையின் உடலில் ஏதாவது சிறுகாயமொன்றை ஏற்படுத்துவது போன்றும் கருப்பு மையிடுவது என்றும் இன்னும் பல தந்திர நடவடிக்கைகள் கிராமத்து மக்களிடம் நமபிக்கையாக இருந்து வருகின்றன.

"என் அரசன் காது குத்த
என்ன செல்லும் ஆசாரி
…. …. …… ……
உனக்கு கண்ணேறு தையாமல்
சுண்ணாம்பு மஞ்சளும்
சுத்தி யெறி சூரியர்க்கே" (நா.வானமாமலை 2006;102)

இங்கு சுண்ணாம்பும் மஞ்சளும் நீரில் இணைத்து இரத்தம் மாதிரியான நிறத்தில் சூரியன் பார்க்க வாசலில் கொண்டு வந்து கொட்டி 'கண்ணேறு கழித்தல்' செய்யும் வழக்கம் குறிப்பிடப்படுகிறது. கண் பட்டால் குழந்தைக்கு உடல் நோய் வர வாய்ப்புள்ளது என்றும் அது போக்க எடுக்கும் நடவடிக்கை 'கண்ணேறு கழித்தல்' என்பதும் வழக்கமாக இருந்து வருவதாகும். இதனை "உண்மையாகவே சில கண்களுக்கு தீமையை விளைவிக்கும் சக்தியுண்டென்பது மந்திரவாதக் கருத்து" (மேலது, ப.100) என்றும் நாட்டுப்புறவியல் ஆய்வு அறிஞர் நா. வானமாமலை சுட்டிச்செல்வதும் கவனத்திற்குரியதாகும். உலகலாவிய நம்பிக்கையும் குழந்தையை காக்கும் தத்துவார்த்த நடவடிக்கைகளும் அதில் உள்ள மெய்ப்பொருளை உணர்த்துகிறது.

உடல் – உயிர் தத்துவம்

உயிரும் உடலும் உருவாவதையும் அவை உயிர்பெற்று இம்மண்ணுலகில் மலர்போன்று பூத்து வளர்ந்து வருவதையும் தாய் தன் அறிவுப்புலத்திற்கு ஏற்ப, தனது அனுபவ கருத்தினை மொழிகிறாள்,

"புதுசா நெலம் வாங்கி – ஏனய்யா
பூவரசு உண்டு பண்ணி
அத்லே விருந்தோடி – ஏனய்யா நீ
அரந்தப்பூ பூத்த கண்ணோ
அம்மியடியில – ஏனய்யா நீ
ஆவரணப் பெட்டியிலே
கெந்தகப் பெட்டியிலே – ஏனய்யா நீ
கெர்ப்பமா(த்) தரிச்சவனோ" (ஒ.முத்தையா, தொ.7;2001;43)

இவ்வரிகள் ஆண் பெண் உறவுகள் அடிப்படையில் பெண் இவ்வுலகில் உயிரைப் படைத்து உலகை உருவாக்குபவளாக இருக்கிறாள் என்பதையும் உயிர் உண்டாகும் அடிவயிறும் தொப்புள்

கொடியில் இருந்து விடுபட்டு வரும் பூப்போன்ற உயிர் குழந்தை என்பதும் பதிவுசெய்யப்பட்டுள்ளது. குழந்தையைப் பாவித்து பாடும் பாட்டு உயிர்-உடல் உண்டாகும் உன்னதத்தை குறிப்பதாக உணரலாம். தாயும் பிரசவம் பார்க்கும் பெண்ணினத்தையும் விட உலகில் உடல் – உயிர் தத்துவத்தை உரைத்திட முடியுமா? எனும் கண்ணோட்டத்தில் கண்டால் தாய் தத்துவ ஞானியாகவே தெரிகிறார்.

சமுதாயப் புரட்சிகர - தத்துவார்த்தச் சிந்தனை

குழந்தைக்குத் தாலாட்டுப் பாடும் தாயானவள். ஊரின் நீர் நிலையை, ஆற்று வருணனையை பாடுகிறார். அதிலே,

"தண்ணிக்கொரு தீட்டுமில்லை – கண்ணே அதைத்
தடுக்க ஒரு நாதியில்லை
பார்ப்பானுக்கும் பச்சைத் தண்ணி
பறையனுக்கும் பச்சைத் தண்ணி
காசிதீர்த்தம் பச்சைத் தண்ணி
… …. … … …
ஏழைபாழை எல்லாருக்கும் – கண்மணியே
இருக்கிறது பச்சைத் தண்ணி" (கி.வா.ஜகந்நாதன் 2004;240)

என்று வருணாசிரம அடிப்படையில் மனிதர்களை பாகுபடுத்தி பார்ப்பது போன்று தண்ணீரையும் வேறுபடுத்தி பார்க்கும் சமுதாயத்திற்கு உண்மையை உரக்க சொல்லியிருக்கிறார். தன் பேச்சுரிமையை வெளிப்படுத்தும் களனாக தாலாட்டினை தாயார் பயன்படுத்தியதோடு மட்டுமல்லாமல் தண்ணீர் குறித்த தத்துவார்த்த உண்மையினை புலப்படுத்தியிருப்பதைக் காண முடிகிறது.

தாய் - வாழ்க்கையில் கண்ட பேருண்மைகள்

இப்பிரபஞ்சத்தில் கண்ணுக்கு தெரிந்து உலக உயிரினங்களை ஆளுமை செய்யும் திறன் கொண்டது ஐம்பெரும் பூதங்களான நிலம், நீர், நெருப்பு, காற்று ஆகாயம் போன்றவைகளாகும். அவற்றின் மீது எப்போதும் கிராமப்புற மக்கள் மிகுந்த நம்பிக்கையும் ஈடுபாடும் கொண்டிருப்பர். அதில் நிலம், நீர் பற்றிய தனது புரிதலை தாய் தனது கவியிலே உரைக்கும் போது

"புமாதேவி தயவாலே – கண்ணே நம்
புமியெல்லாம் விளைஞ்சிருச்சு" (மேலது, ப.227)

என்று நிலமகளின் மலர்ச்சியையும்

"உயிர் கொடுப்பதும் பச்சைத் தண்ணி – கண்மணியே
உயிர் எடுப்பதும் பச்சைத் தண்ணி" (மேலது, ப.241)

என நீரின் உன்னதத்தையும் வெளிப்படுத்துகிற இடத்தில் நீரால் நிலம் விளைவதும் நிலத்தில் வாழும் மனித உயிர்களுக்கு உயிர் கொடுப்பதாகவும் நீர் ஆதாரம் உள்ளது. அதுவே உயிர் பிரிகின்ற நேரத்தில் நீர் ஊற்றினால் நீரால்தான் உயிர் தனது துடிப்பை நிறுத்திக்கொள்கிறது என்கிற நிகழ்வினை உரைப்பதன் வாயிலாக, நீர் குறித்த மெய்ப்பொருளை, தத்துவச் சிந்தனையைத் தாலாட்டுப்பாடலின் மூலமாக அறிகிறோம்.

தாய்மை எனும் முக்திபேறு

“பெறுமவற்றுள் யாம் அறிவது இல்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற” (குறள்:61)

என்ற வள்ளுவரின் மக்கட்பேறு பற்றிய கூற்றிற்கிணங்க

“முக்காகுளம் முழுவி எங்கப்பா – நாங்க
முக்திபெற வந்தாயோ (ராராரீ ராரோ)” (அ.கருணாநிதி,தொ.4,2001;35)

என்று தாங்கள் குழந்தை ஈன்றெடுத்ததே பெற இருந்த மிகப்பெரும் முக்தி எனும் பேறு அடைந்ததாக எண்ணி தாலாட்டுப் பாடலில் பதிவு செய்கிறார்.

தாய் உணர்ந்த மறுபிறவி

தாய் தான் குழந்தையைப் பெற்று எடுக்கும் போது பட்ட பெரும்பாட்டினை,

கல்லுருகப் பில்லுருக – ஏனய்யா
கண்டவக மணமுருக
எலும்புருக(ப்) பெத்தெடுத்த
எலஞ்சியமே கண்ணுறங்கு” (மேலது, ப.45)

என உடலும் எலும்பும் மட்டும் அல்ல உயிரும் உருகிப் பெற்றெடுத்தக் குழந்தையை, நோக்கி, தன் உணர்வுகளை வெளிப்படுத்துகிறார். உயிர் சென்று மீளும் தருணத்தை தாலாட்டில் பதிவுசெய்கிறாள் தாய். இக்கருத்தினை வலுப்படுத்தும் விதமாக, “உடல் களைப்பும் உள்ளத்துடிப்பும் சேர்ந்து உயிர் சென்று மீளும் நிலை தாயினைப் பெரிதும் துன்பப்படுத்தும் ‘மறுபிறவி’ அடைவது போன்ற துன்பத்தை மகப்பேறு தருகிறது என்றும் தன் உடலின் ஒரு கூறாய் உயிரின் மறுபதிப்பாய்த் தோன்றிய குழந்தையைக் கண்டதும் தாயின் உள்ளம் கொள்ளை இன்பம் கொள்கிறது”. (சு.கோகிலவாணி 2005;7) என்று தாய்க்கும் குழந்தைக்குமான உறவு நிலையை உளவியல் நோக்கில் ஆராய்ந்து கோகிலவாணி அவர்கள் உரைத்திருப்பதைக் காணமுடிகிறது.

வள்ளலாரும் தாய் அன்பும்

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை என்ற தத்துவக்கொள்கை கொண்ட இராமலிங்க வள்ளலார் வழியில் தாய்மை உள்ளம் மொழிவதை,

சோர்ந்த மொகங்கண்டு – எம் மனம்
சொழண்டுமே வாடுதம்மா – ஓஞ்

சோர்வு நீங்க வேணும்மின்னா – நீங்க

சோறு திங்க வேணுமம்மா

பசியால துடிக்கிற எங்கண்ணே – ஓம்

பால் மொகம் மாறக் கண்டு

பாவிநான் ஏங்குறம்மா – எம் மனம்

பறவா பறக்குதம்மா” (அ.கருணாநிதி, தொ.4, 2001;53)

என்ற பாடலடிகள் காட்டுகின்றன. இங்கு கணவனால் கைவிடப்பட்ட ஓர் அபலைப் பெண்ணின் குரலில் குழந்தையின் பசிமுகம் கண்டு துடிதுடித்து மனம் பதறும் உணர்வுகள் மொழியப்பட்டுள்ளதை காண்கிறோம். குழந்தை பசியால் வாடி இருப்பதைக் கண்ட தாயின் பதற்றத்தில் எழும் உணர்வானது ‘வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்’ என்று உரைக்கும் வள்ளலாரின் மனிதநேயத் தத்துவத்துடன் ஒப்பு நோக்கத்தக்கதாக உள்ளது.

தாய் சொல்லும் நன்னெறி

“தாய் சொல்லை தட்டாதே – கண்ணே

தகப்பன் சொல்லைத் தவறாதே” (கி.வா.ஜகந்நாதன் 2004;235)

என்று தனது குழந்தைக்குத் தேவையான வாழ்வியல் வழிகாட்டுதலை, அறிவுரையை குழந்தையின் எதிர்காலம் கருதி உரைக்கிறாள். வாழ்க்கை சிறப்புற அமைய வேண்டுமானால் தாய் - தந்தையர் சொல்லைக் கேட்டு நடக்க வேண்டும் என்பது தாய் சொல்லும் நன்னெறியாக இருக்கிறது.

நிறைவாக

தமிழில் தத்துவச் சிந்தனையென்பது மெய்ப்பொருள் எனும் பதத்தில் கையாளப்படுகிறது. நாட்டுப்புற பாடல்களில் ஒன்றான தாலாட்டுப் பாடலின் படைப்பாளியாக தாயார் இருக்கிறார். குழந்தையின் உறக்கத்திற்காக பாடப்பட்டாலும் அதில் தாய் தன் உள்ளத்தின் உணர்வுகளை வெளிப்படுத்துதை காண முடிகிறது. வழிவழியாக வரும் நம்பிக்கைகளை கொண்டு அதன் உண்மைநிலையினை தாயார் அவரின் புரிதலில் தத்துவார்த்தமான உண்மைநிலையினை உரைக்கிறார். கருத்தினை காலத்தின் ஓட்டத்தில் கடத்தினாலும் தங்களின் காலத்திய சமூக நிகழ்வுகளை பிரதிபலிக்க செய்திருக்கிறார்கள். தாய்மை என்பது வெறுமனே சொல்லாக இல்லாமல் வாழ்வாக, வாழ்வியல் தத்துவமாக விளங்குவதை உய்த்துணர முடிகிறது. மொத்தத்தில் தாலாட்டு இலக்கியத்தைப் பாடிய, படைத்த தாய்மார்கள் பாமரக் குடிசைகளில் வாழ்ந்த ஞானியர் என்றே கருதலாம்.

துணைநின்ற நூல்கள்

1. இராமநாதன் ஆறு – *நாட்டுப்புறப் பாடல் களஞ்சியம்*, தொகுதி -1 (2001), மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் – 01.

2. கந்தசாமி சோ.ந. – *இந்தியத் தத்தவக் களஞ்சியம்*, தொகுதி -1 (2003), மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம் - 01.
3. கருணாநிதி அ. – *நாட்டுப்புற பாடல் களஞ்சியம்*, தொகுதி – 4 (2001), மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம் – 01.
4. கோகிலவாணி சு. – *சங்க இலக்கியத்தில் தாய் – சேய் உறவு* (2005), தி பார்க்கர், 293, அகமது வணிக வளாகம், சென்னை –
5. கோச்சடை சே. – *தத்துவம் மிகச் சுருக்கமான அறிமுகம்* – எட்வர்டு கிரெய்க் (2005), அடையாளம், புத்தாநத்தம், திருச்சி – 621 310.
6. கொதண்டராமன் பொன். – *ஆராய்ச்சி நெறிமுறைகள்* (2004), ஐந்திணைப் பதிப்பகம், சென்னை -5.
7. சக்திவேல் சு. – *நாட்டுப்புற இயல் அய்வு* (2013), மணிவாசகர் பதிப்பகம், பாரிமனை, சென்னை – 10.
8. சண்முகசுந்தரம் சு. – *தமிழில் நாட்டுப்புறப் பாடல்கள்* (2003), காவ்யா, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை – 02.
9. சண்முகசுந்தரம் சு. – *நாட்டுப்புறவியல்* (2007), காவ்யா, டிரஸ்ட்புரம், கோடம்பாக்கம், சென்னை – 02.
10. திருமாவளவன் வெ.ச. – *நாட்டுப்புறவியல்* (2006), அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்.
11. வானமாமலை நா. – *தமிழர் நாட்டுப் பாடல்கள்* (2006), நியூ செஞ்சுரி புக்ஸ் (பி) லிட், சென்னனை – 98.
12. ஜகந்நாதன் கி.வா. – *மலை அருவி (நாட்டுப்புறப் பாடல்கள்)* (2004), சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

தமிழில் இக்கட்டுரையின் மேற்கோள்

முத்துலிங்கம், கு. "தாலாட்டு உணர்த்தும் மெய்ப்பொருள் சிந்தனை" புலம் : பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், தொகுதி 1, இதழ் 1, ஏப்ரல் 2021, பக். 17-26

Cite this Article in English

Muthulingam, G. " Lullaby Realizing philosophical thought " Pulam: International Journal of Tamilology Studies, Vol.1 Issue 1, April 2021, pp. 17-26